**தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை – 2018**

## 1. நிதி குற்றுச்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2020 சனவரி 09 இல் பாராளுமன்றத்தில் அட்டவணைப்படுத்தப்பட்ட பாராளுமன்ற பிரசுரிப்புத் தொடர்களின் பகுதி XVIII, தொகுதி II இல் உள்ளடக்கப்பட்ட தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் கொடுக்கல்வாங்கல் அறிக்கையில் பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் காணப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்கள் மீதான குறிப்பிட்ட அறிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய மேலதிக அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து அதிகாரசபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதிகாரசபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- அதிகாரசபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 1 இன் 32 ஆம் பந்திக்கு முரணாக ரூபா 329,641 கூட்டுமொத்தமான இரண்டு வரவு மீதிகள் மற்றும் ரூபா 1,369,307 கூட்டுமொத்தமான இரண்டு செலவு மீதிகள் ஏனைய எதிர்ப்பக்க கணக்குகளிற்கு எதிராக ஈடுசெய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. மேலும் இலங்கை கணக்கீட்டு நியமம் 1 இன் 113 ஆம் பந்தியின் பிரகாரம் விரிவான வருமானக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 61,067,576 வட்டி வருமானம் மற்றும் ரூபா 1,079,748 ஏனைய வருமானம் என்பவற்றை பகுப்பாய்வு செய்வதற்கு குறிப்புக்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் பதிவு செய்வதற்கு சரியான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) எதிர்வரும் ஆண்டுகளிற்கான வருமானமாக மீளாய்வாண்டின் போது பெறப்பட்ட ரூபா 8,015,487 கூட்டுமொத்த தொகையானது மீளாய்வாண்டிற்கான வருமானமாக கணக்குகளிற்கு எடுக்கப்பட்டிருந்த அதே நேரம் மீளாய்வாண்டிற்கான வருமானமாக பெறப்பட்ட ரூபா 14,033,676 கூட்டுமொத்த தொகையானது முற்பணமாக பெறப்பட்ட வருமானமாக கணக்குகளிற்கு எடுக்கப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக மீளாய்வாண்டின் போது பெறப்பட்ட ரூபா 577,230 தொகையான வருமானம் உரிய வருமானக் கணக்குகளிற்கு இரண்டு முறை பதிவு செய்யப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டிற்கான கணக்குகளை தயாரிக்கும் போது சீசெய்யப்படும். | முன்னைய ஆண்டில் அத்தகைய தவறை சீர்செய்த பின்னர் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்ட 85 சிகிச்சையளிக்கும் மருத்துவ உபகரண அனுமதிப்பத்திரங்களிற்கான வருமானமாக மீளாய்வாண்டின் போது பெறப்பட்ட ரூபா 1,390,470 தொகையானது இரண்டு வருமானக் கணக்குகளிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | 2017 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட 20 மருந்து பதிவுச் சான்றிதழ்களிற்கான கட்டணங்களாக 2017 ஆம் ஆண்டின் போது பெறப்பட்ட ரூபா 1,073,594 தொகையானது மீளாய்வாண்டிற்கான வருமானமாக காட்டப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஈ) | முன்னைய ஆண்டிற்காக மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்த ஓய்வூதியத் திட்டத்திற்கான ரூபா 366,724 தொகையான பங்களிப்பு அட்டுறு ஓய்வூதிய பங்களிப்பு நிதியக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட வேண்டிய போதிலும் அதற்குப் பதிலாக இது இரண்டாம்தர படிகள் செலவினக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டிற்கான கணக்குகளை தயாரிக்கும் போது சீர் செய்யப்படும். | முன்னைய ஆண்டில் அத்தகைய தவறை சீர் செய்த பின்னர் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (உ) | ஓய்வூதியத் திட்டத்திற்கான பங்களிப்புக் கொடுப்பனவிற்காக வழங்கப்பட்ட காசோலைகளின் பெறுமதியானது அக் காசோலைகள் இரத்துச் செய்யப்பட்டதன் காரணமாக காசுப் புத்தகத்திற்கு வரவு வைக்கப்பட்டு ஓய்வூதிய பங்களிப்பு நிதியக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் காசோலைப் பெறுமதியில் ரூபா 2,873,417 தொகை முன்னைய ஆண்டுச் சீராக்கல் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 1,089,610 மிகுதி தொகை அட்டுறு ஏனைய செலவினக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 2,638,792 தொகையான அட்டுறு செலவினம் கணக்குகளிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (எ) | அதிகாரசபையால் வெளித் தரப்பினர்களிற்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 1,196,353 தொகையான பெறுமதி சேர் வரி (வற்) பெறுமதியானது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய பெறுமதி சேர் வரிக்கு (வற்) எதிராக ஈடுசெய்யப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டின் போது பொருள் உற்பத்தி செயன்முறை பரீட்சைக் கட்டண வருமானங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட ரூபா 6,178,406 தொகையான பெறுமதி சேர் வரி (வற்) பெறுமதியானது பெறப்பட்ட முற்பணங்கள் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டிற்கான கணக்குகளை தயாரிக்கும் போது சீர் செய்யப்படும். | முன்னைய ஆண்டில் அத்தகைய தவறை சீர் செய்த பின்னர் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஏ) | மீளாய்வாண்டிற்குரிய திறைசேரி முறிகள் மீதான வட்டி வருமானமானது கணக்குகளில் ரூபா 241,679 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்குரிய வருமான வரிப் பொறுப்பானது கணக்குகளில் ரூபா 226,976 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஐ) | "WHO Benchmarking Tool" நிகழ்ச்சித்திட்ட செலவினங்களிற்காக உலக சுகாதார நிறுவனத்திலிருந்து பெறப்பட்டிருந்த ரூபா 1,263,521 மானியம் விசேட மானியமொன்றாக கணக்குகளிற்கு எடுக்கப்பட்டிருக்காததுடன் ரூபா 1,059,800 தொகையான உள்ளபடியான செலவினம் காலக்கழிவிடப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஒ) | 5 விடயங்களிற்குரிய ரூபா 34,680,636 தொகையான வேறுபாடொன்று நிதிக்கூற்றுக்கள் மற்றும் உரிய பட்டியல்களில் காட்டப்பட்ட மீதிகளிற்கு இடையே அவதானிக்கப்பட்டிருந்ததுடன் குறிப்பிடப்பட்ட வேறுபாட்டிற்கான காரணங்கள் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டிற்கான கணக்குகளை தயாரிக்கும் போது சீர் செய்யப்படும். | முன்னைய ஆண்டில் அத்தகைய தவறை சீர் செய்த பின்னர் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஓ) | ரூபா 33,423,063 தொகையான பெறப்பட்ட முற்பணக் கணக்கு மீதிக்கான பட்டியல்கள் மற்றும் வயதுப் பகுப்பாய்வு என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சரியான மாதிரி வடிவத்தில் பேணப்பட்டிருக்காத முற்பணப் பதிவேடுகள், பட்டியல்கள் மற்றும் வயதுப் பகுப்பாய்வு என்பவற்றின் தவறு ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. நிரந்தரப் பதவியணியினர் காணப்படாதமை குறிப்பிடப்பட்ட தவறிற்கு காரணமாக இருந்ததுடன் உரிய அனைத்து உத்தியோகத்தர்களிற்கும் கணக்கீட்டுத் தவறுகளை இழிவுபடுத்தும் தேவைப்பாடு தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |

## 2. நிதி மீளாய்வு

-------------------

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 809,170,663 மிகையொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 288,823,697 ஆக காணப்பட்டதால் நிதி விளைவுகளில் ரூபா 520,346,966 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. பதிவுசெய்தல் வருமானம் 125 சதவீதத்தால் அதிகரித்தமையே குறிப்பிடப்பட்ட முன்னேற்றத்திற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது. எனினும் உரிய கணக்கீட்டுக் காலப்பகுதியின் பிரகாரம் காசாகவும் வங்கிக்கு நேரடியாகவும் பெறப்பட்டிருந்த பதிவுசெய்தல் கட்டணங்கள் மற்றும் அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் உள்ளடங்கலான அனைத்து வருமானங்களையும் இனங்காண்பதற்கு முறையான பொறிமுறையொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. பெறப்பட்ட முற்பணக் கணக்கொன்றிற்கு அனைத்துப் பெறுவனவுகளையும் செலவு வைப்பதைத் தொடர்ந்து வருமானத்தை இனங்காணும் நடைமுறையொன்று பின்பற்றப்பட்டிருந்ததனால் மீளாய்வாண்டிற்கான வருமானம் சரியாக இனங்காணப்பட்டிருக்கவில்லை.